# கிருபையுள்ள வார்த்தை ®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 18 | February பிப்ரவரி | 2018

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் BETTY CHOATE    ஆசிரியர் பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| விதைப்பும் அறுப்பும் | 3 |
| இரண்டு அறுவடைகள் | 6 |
| கனிகளை கொடுத்திட | 8 |
| நல்ல கனிகளை... | 10 |
| உபதேசம் என்றால் ... | 11 |
| சிறுவர் பகுதி | 15 |


*In memory of J.C. CHOATE*


*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,



## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை

**6 மணி முதல் 6-30 மணி**

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்


ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்


சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,

(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

**கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.**








**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:

**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**

P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

**நீதிக்கென்று விதைத்து மெய்பலனை அறுக்க உதவும் நீதியின் வார்த்தை**

World Literature Publication

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




Send Postal Expenses only and receive The Voice of Truth International Vol. 95

ஆசிரியர் உரை

# விதைப்பும் அறுப்பும்

P.C. பிலேமோன் ராஜா



அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எனது வாழ்த்துகள் மற்றும் ஜெபங்கள். இவ்விதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

## 1. தேவனும் விவசாயமும்

தேவன் விதைகளை (விவசாயத்தை) உருவாக்கினார். ஆதி 1: 11–12 "அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. பூமியானது புல்லையும், தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது. தேவன் அது நல்லது என்று கண்டார்."

விதைக்க வேண்டும் என்பதால் தான், தேவன் செடி, கொடி, மரம் என அனைத்து தாவரங்களையும் விதையுடன், இனப்பெருக்க தன்மையுடன் படைத்தார். இந்த உலகின் மிக அழகிய தோட்டமாகிய ஏதேனை உண்டாக்கியவர் தேவன். அவர் நல்லது என்று கண்ட விவசாயத்தை மனிதன் ஏனோ புறக்கணிக்கின்றான். விவசாயத்தை புறக்கணித்த எந்த தேசமும் தேய்ந்து போனது காலத்தின் வரலாறு.

விவசாயியை உண்டாக்கியவர் தேவன். ஆதி 2:15 "தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்."

இந்த உலகத்தின் முதல் விவசாயின் பெயர் ஆதாம். அவனுக்கு விவசாய வேலை கொடுத்து, பார்க்க செய்தவர், எல்லாம் வல்ல தேவன். அவர் அநேக மிருகங்களையும், ஆடுமாடுகளையும் படைத்திருந்தார். அவைகளை மேய்க்கிற வேலையை அவனிற்கு கொடாமல், நிலத்தை பண்படுத்துகின்ற வேலையையும், அதை காக்கின்ற வேலையையும் கொடுத்தார். தேவன் நமக்கு கொடுத்த நிலத்தை பண்படுத்தி, பாதுகாக்க வேண்டும். மண்ணிலிருந்து அதன் சத்துக்கள் உறிஞ்சப்படுமானால், அந்த மண் செத்துவிடும். செத்த மண் எந்த உயிரும் வாழ அருகதையற்றதாகிவிடும். உலக அதிசயமான தொங்கும் தோட்டம் இருந்த பாபிலோன், அதற்கு சிறந்த உதாரணம். ஆகையால் தான் தண்ணீர் வறட்சியான இஸ்ரவேல் தேசத்தில், சொட்டுநீர்பாசனம் முறையில் விவசாயம் செய்கின்றனர். அது மட்டுமல்லாது, விவசாய முறைகளையும், எப்படி விதைக்கனும், எப்படி விதைக்க கூடாது என்றும் தேவன் சொல்லிக்கொடுத்துள்ளார் (லேவி 25:3–7: உபா 22:10: லேவி 19:19). உதாரணமாக, விதைகளை கலந்து விதைக்க வேண்டாம்; அது நிலத்திற்கு கெடுதி என்றார். ஆயினும், இன்றைய நாட்களில், பண ஆசையினால் மனிதன், ஊடுபயிர் என்று விதைத்துக்கொண்டிருக்கின்றான்.

மேலும், விவசாயத்திற்கென்று பண்டிகையை கொண்டாட சொன்னவரும் தேவன். அது தான் 'பெந்தெகொஸ்தே' என்னும் அறுப்பின் பண்டிகை (யாத் 23:14,16,17).

## 2. கிறிஸ்துவும் விவசாயமும்

நமது ஆண்டவர் இயேசு பயன்படுத்தின அநேக உவமைகள் விவசாயம் சார்ந்ததாக உள்ளதை நாம் அறிய முடியும். பரலோக ராஜ்யத்தை கடுகுவிதைக்கு ஒப்பிட்டு பேசினார் (மத் 13:31): கள்ள போதனைகளையும், போதகர்களையும் களைகளுக்கு ஒப்பிட்டு பேசினார் (மத் 13:18–23): மனிதனுடைய இருதயத்தை நிலமாகவும், வசனத்தை விதையாகவும், தன்னை விதைக்கிறவராகவும் ஒப்பிட்டு பேசினார் (மத் 13:24–30).

ஆண்டவருக்கும் நமக்குமான உறவை திராட்சைசெடி, கொடிக்கு ஒப்பிட்டு பேசினார் (யோவான் 15): நாம் மிகுதியான கனிகளை கொடுக்கின்ற கொடியாக இருந்து, தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்றார். யோவான் 15:8 "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்."

ஆத்துமாக்களை விளைச்சலாக ஒப்பிட்டு, அவருடைய சீடர்களாகிய நம்மை, மன பாரத்துடன் உழைக்கும்படி உற்சாகப்படுத்தினார். மத்தேயு 9:36-38 "அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால் அறுப்புக்கு எஜமான் (அறுவடையின் எஜமான்) தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்."

ஆகையால் நாம் கிறிஸ்துவைப் போல, விதையாக தேவனுடைய வசனத்தை (லூக் 8:11), நிலமாகிய மனிதனுடைய இருதயத்தில் (லூக் 8:16) விதைத்திட வேண்டும். விரும்பினால் செய்வதற்கும், இல்லாவிடில் தவிர்ப்பதற்கும் இது விருப்ப தேர்வு அல்ல; இது ராஜாதி ராஜாவின் கட்டளை (மத் 28:18-20).

## 3. எதை விதைக்கிறோமோ, அதையே அறுப்போம்.

விதைப்பும் அறுப்பும் பற்றி வேதாகமம் நமக்கு கொடுக்கின்ற அறைகூவல், 'விதைப்பதையே அறுப்போம்' என்பதே! ஆகையால், 'எதை அறுவடை செய்ய விரும்புகிறாயோ அதையே விதை' என்கிறது வேதம். கலா 6:7 "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்."

"விதைத்தவன் உறங்கினாலும், விதை உறங்குவதில்லை" என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதற்கு முளைக்கிற தன்மை இருக்கிறது; ஆகையால் அது முளைத்தே தீரும்! நாமும் அறுத்தே தீர வேண்டும்! யோபு 4:8 "நான் கண்டிருக்கிறபடி, அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள், அதையே அறுக்கிறார்கள்."

தீமையை விதைத்துவிட்டு, நன்மையை அறுக்க முடியாது! நன்மையை விதைக்கிறவர்களுக்கு தீமை வந்து சேரப்போறதுமில்லை. மத்தேயு 7:16,17 "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்." விதைப்பது ஒன்று, அறுப்பது ஒன்று என இருக்கப்போவதில்லை. ஆகையால் விதைப்பதை குறித்து கவனமாக இருக்க வேண்டும்.

## 4. எவ்வளவு விதைக்கிறோமோ, அவ்வளவு அறுப்போம்.

ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என எந்த அளவு விதைக்கிறோமோ, அந்த அளவே மகசூலை (அறுவடை) பெற்றுக்கொள்ள முடியும். 2கொரி 9:6 "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்."

நாம் சிந்திப்பது, பேசுவது, செய்வது ஒவ்வொன்றும் 'விதை' தான். ஒவ்வொரு முறையும் வார்த்தைகளை அள்ளிவீசி எப்படி விதைக்கின்றோமோ? அப்படியே அறுப்போம். நீதி 11:24,25 "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்."

தாவீதை சிந்தித்துப்பாருங்கள்; அடுத்தவன் மனைவியை தனக்கென்று எடுத்துக்கொண்டு, அவனை கொலையும் செய்தான். அதினால் அவன் மனைவியும் அவனது வழித்தோன்றல்களாலே எடுத்துக்கொள்ளப்பட்டனர். மேலும், அவனது பிள்ளைகள் சிலர் ஒருவரையொருவர் விரோதித்து கொன்றுபோடப்பட்டனர். தாவீது, தீமையை எந்த அளவு விதைத்தானோ அந்த அளவு அறுத்தான். அதேப்போல் நன்மையை எந்த அளவு விதைத்தானோ அந்த அளவு அதையும் அறுத்தான். ஆண்டவர் சொன்ன எச்சரிப்பை கொஞ்சம் நிதானியுங்கள். லூக்கா 6:38 "நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படுமென்றார்."

## 5. எதற்கென்று விதைக்கப்போகிறீர்கள்?

கலா 6:8 "தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்." சரீரத்திற்கென்று விதைப்பது, ஆவிக்கென்று விதைப்பது என இரண்டுவித விதைத்தல்கள் உள்ளன. அதற்கு ஏற்றவாறு நித்திய வாழ்வு, நித்திய அழிவு என்ற இரண்டு வகையான அறுவடைகளும் உள்ளன. நீங்கள் எதை விதைத்து எதை அறுக்கப்போகிறீர்கள் என்று நிதானித்து முடிவெடுங்கள்.

ஓசியா 10:12 "நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள்;

தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள்; உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது." நீதிகென்று (தேவனுடைய வார்த்தைகென்று) விதைக்கிறவனுக்கு மெய்பலன் உண்டு. அது என்ன நீதிக்கென்று விதைப்பது? ஒருவருடைய இருதயத்தில் நீதியான வசனத்தை விதைப்பது.

நீதி 11:18 "துன்மார்க்கன் விருதாவேலையைச் செய்கிறான்; நீதியை விதைக்கிறவனோ மெய்ப்பலனைப் பெறுவான்." நீதியை விதைக்கிறவர்களுக்கு மெய் பலன் உண்டு என்பதை நினைவில் கொள்வோம். தேவனுடைய வார்த்தையாகிய நீதியன் மீது பசி தாகம் கொள்வோம். நல்லது எது? கெட்டது எது? என பகுத்துப்பார்க்கிற பக்குவம் நமது பிள்ளைகளிடத்தில் இராதபடியினால், கூடவே இருந்து, ஒவ்வொன்றாய், பொறுமையாக, அழிவுக்கு ஏதுவான உலக காரியங்களை கற்றுக்கொடுக்கிறது போல, மெய் வாழ்வையும் மெய்பலனையும் தருகின்ற ஆவிக்குரியவைகளை இன்னும் பொறுமையாக, விசுவாசத்துடன் கற்றுக்கொடுப்போம்.

பிர 11:1,6 "உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு; அநேக நாட்களுக்குப் பினபு அதின் பலனைக் காண்பாய். காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே; அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே." வசனத்தை விதையுங்கள், அதை வளரச்செய்கிற வல்லமை தேவனிடத்திலிருக்கிறது (1கொரி 3:6). நம்முடைய வேலை, ஆகாரத்தை (விதையை) தண்ணீர்கள் (இருதயத்தின்) மேல் போடுவதாகும். அநேக நாட்களுக்கு பிறகு அது பலன் கொடுக்கும். அது ஒரு நாளும் வீணாகாது (1கொரி 15:58).

ஒரு நாளைக்கு ஒரு நிமிடமாவது செலவழித்து, ஒரு நபருக்கு ஒரு கைபிரதியாவது கொடுங்கள். 365 நாட்களில், 365 இருதயங்களில் நீங்கள் கர்த்தருடயை வசனத்தை ஒருமுறை விதைத்துவிடலாம். "வண்ணமயமான கைபிரதிகள்" கர்த்தருடைய சத்தியத்துடன் எங்களிடம் உண்டு; தொடர்புக்கொள்ளுங்கள். நீதியை விதையுங்கள். ஆண்டவர் சொன்னபடி "அறுப்பு மிகுதி" என்பதை நினைத்து, கதிர்களை களஞ்சியத்தில் சேர்க்கும்படி அறுத்திட ஓய்வில்லாமல் உழையுங்கள். தேவன் உங்களை, அநேகரை ஆசீர்வதிக்கும்படி உங்கள் விதைத்தலுக்கான நற்பலன்களை உங்கள் வாழ்வில் தந்தருள்வாராக!

– அன்புடன், ஆசிரியர்.

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : **92 4421 4421 & 92 4431 4431)** ***Nambikai TV :*** *Every Friday 6.00 - 6.30 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)


**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

Two Harvests

# இரண்டு அறுவடைகள் (வெளி 14:14-20)



அன்பு வாசக நண்பரே! சகோதர சகோதரிகளே! அறுவடை ஆசான் மற்றும் நியாயத்தீர்ப்பின் நாயகனாம், நம் இயேசு ஆண்டவரின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். விதைப்பை பற்றியும், அறுவடையைக் குறித்தும் நாம், வேதாகமத்தில் காண முடிகின்றது. நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் கூட **மத் 13:30ல்,** 'அறுவடைகாலத்தில், களைகளை சுட்டெரிக்கவும், கோதுமையை களஞ்சியத்தில் சேர்க்கவும்' என்பது பற்றி கூறுகிறார். இம்மாதம், இதே அறுவடையைக் குறித்த கருத்தை **வெளி. 14ல்** இருந்து தியானிப்போம்.

இங்கு வசனங்கள் 14 முதல் 16 வரையிலும் ஒரு அறுவடையைப் பற்றியும், வசனங்கள் 17 முதல் 20 வரை மற்றொரு அறுவடையைப் பற்றியும் காண்கின்றோம். இவை இரண்டுமே பூமியின் அறுவடைகள். முதலாவது அறுவடை "நன்கு விளைந்த" **(வசனம் 15)** பயிரைப் பற்றியது. இது நீதிமான்களைக் குறிக்கும் அறுவடை; வேத வசனத்திற்கு கீழ்படிந்து, இரட்சிக்கப்பட்டு, அந்த இரட்சிப்பை இறுதி வரை காத்துக் கொண்டவர்களைக் குறிக்கும் அறுவடை. **மத்தேயு 13ல்** ஆண்டவர் குறிக்கும் அறுவடையோடு ஒப்பிட்டும் பார்த்தால், இவை இவர்கள் களஞ்சியத்தில் (பரலோகத்தில்) பரமனோடு இருக்கும்படி அறுக்கப்பட்டவர்கள். தங்கள் 'நீதியின் பலனை' அடையும்படி அறுவடை செய்யப்பட்டவர்கள்.

இரண்டாவது அறுவடையோ, பழுத்த திராட்சைப் பழங்களுக்கானது. இங்கு அறுக்கப்படுவது திராட்சைக் குலைகளானாலும், அவை 'அநீதியின்' விளைவாக இருக்கின்றது என்பதை, **வசனம் 19ல்,** "...பூமியின் திராட்சைப் பழங்களை அறுத்து, தேவனுடைய கோபாக்கினை என்னும் பெரிய ஆலையிலே போட்டான்" என்று வாசிப்பதிலிருந்து பார்க்கின்றோம். பொதுவாக திராட்சைப் பழங்கள் நற்பலனுக்கு ஒப்பாக கூறப்பட்டாலும், இங்கு அறுவடைக்கு சொல்லப்படும் திராட்சை பழங்கள் உபாகமம் 32:32,33ல் கூறப்பட்ட பித்தும், கசப்பும், கொடிய விஷமும் உடையதாக இருந்திருக்க வேண்டும். அதினால்தான் அது அறுவடை செய்யப்பட்டு, தேவனுடைய கோபாக்கினை என்னும் ஆலையிலே போடப்படுகிறது. மேலும் அந்த ஆலை நகரத்திற்கு புறம்பே இருந்தது (நரகம்), மிதிக்கப்பட்டது (தண்டனை), மேலும் இரத்தம் புறப்பட்டது (கொடிய வேதனை) என்று வாசிக்கின்றோம். இந்த அறுவடையையும் ஆண்டவருடைய வார்த்தையோடு ஒப்பிட்டுப்பார்த்தால் **(மத் 13:30),** இது களையாகவும் (பயனற்றது), சுட்டெரிக்கப்பட வேண்டியதாகவும் இருப்பதினால், அநீயின் பலனை அடைபவர்களைப் பற்றியும், வேத வசனத்திற்கு கீழ்படியாதவர்களின் நிலையையும், இரட்சிப்பை பாதுகாத்துக் கொள்ளாதவர்களின் பரிதாப முடிவையும் பற்றி குறிப்பிடுகின்றது.

இங்கே இரண்டு அறுவடை என்பது, இரண்டு விதமான விதைகளையோ, அல்லது இரண்டு விதமான வாழ்க்கை முறையையோ அல்லது பிரயாசங்களையோ குறிக்கின்றது.

**நாம் தேவனுடைய வார்த்தையை விதைக்ககூடும், அல்லது மனிதர்களுடைய பாரம்பரியத்தை விதைக்ககூடும்!** **லூக் 8:11ல்,** விதை என்பது தேவனுடைய வசனம் என்று கூறப்படுகின்றது. அந்த தேவ வசனத்தை பேதுரு, **அப் 2ல்** விதைத்ததினால், கிறிஸ்தவர்கள் உருவாகினார்கள். ஆனால், **மத் 15:9ல்** நமது ஆண்டவர் எச்சரித்து சொன்னபடி, மனுஷருடைய கற்பனைகள் வீணான ஆராதனையையும், கள்ளப் போதகர்களையும், கள்ளப் போதனையையுமே உருவாக்கியது. சரி, இதை பரமபிதா ஏற்றுக் கொள்வாரா என கேட்டால், **மத் 15:13ல்,** அவை வேரோடே பிடுங்கப்படும் என்கிறார்; மேலும் அவை பரம பிதாவினால் நடப்படாதவை, வேத வசனம் என்னும் விதையினால் வளராதவை. ஆகவே பிரியமானவர்களே! நாம் ஒவ்வொரு நாளும் எப்படிப்பட்ட விதையை விளைவிக்கின்றோம், அல்லது ஏற்றுக்கொள்கிறோம் என்பதைக் குறித்து கவனமாக, எச்சரிக்கையாக இருக்க வேண்டும். 'பரம பிதா நடாத

நாற்றெல்லாம்' என்றால், 'வேத வசனத்தினால் உருவாகாத சபைகளெல்லாம்' என்பதும் அடங்கும்; 'மனித போதனைகளால்' உருவாகி, செழிப்பாக இருக்கும் சபைகளும் அடங்கும்!

**❋ தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்; (கலா 6:8).**

ஆம் பிரியமானவர்களே! நம்முடைய விதைப்பு எப்படியோ, அறுவடையும் அதன்படியே இருக்கும். "...மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (வசனம் 7) என்று வாசிக்கின்றோம். இவ்வுலகில் தேவ பயமின்றி, நம் சுய மாம்ச இஷ்டப்படி வாழ்ந்தவர்கள், பரலோகம் செல்லும் எண்ணத்தை விட்டுவிடவேண்டும். உடனே மனந்திரும்பினால் வாய்ப்பு உண்டு!

யோபு 4:8ல், "நான் கண்டிருக்கிறபடி, அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள், அதையே அறுக்கிறார்கள்" என்று வாசிக்கின்றோம். சரி, எப்படி ஒருவர் மாம்சத்திற்கென்று விதைக்கின்றார் என்று பார்த்தால், கலாபு 5:19–21ல், சில மாம்சத்தின் கிரியைகளைப் பற்றி காண்கிறோம். இவற்றில் நம்முடைய பார்வையில் பெரிய, சிறிய பாவங்கள் இரண்டுமே அடங்கும். ஒருவேளை நம்மிடம் விபச்சாரம், விக்கிரக ஆராதனைப்போன்ற பாவங்கள் இல்லாவிட்டாலும், இன்னும் பகையையும், விரோதத்தையும், பொறாமையையும், பிரிவினையையும், சண்டையையும் வெளிப்படுத்துபவர்கள் மாம்சத்திற்கென்றே, அழிவையே, தண்டனைக்கென்றே (வெளி 14:19,20; மத் 13:30) விதைக்கிறார்கள். இதில் கவனிக்க வேண்டியது, மார்க்கபேதங்கள் என்னும் மாம்ச விதையும் ஆகும். 'எந்த சபையாக இருந்தால் என்ன? 'எந்த உபதேசமாக இருந்தால் என்ன?' என்றும், 'எல்லாரும் பைபிளில் இருந்ததுதானே போதிக்கிறார்கள்?' என்றும் பரந்த மனதோடே நீங்கள் கிறிஸ்தவ மார்க்கத்தை நினைப்பவர்களானால், 'மார்க்கபேதம்' என்னும் மாம்ச விதையை விதைத்து, அழிவையே அறுக்கப் போகிறீர்கள்! மனித போதனைகளையும், வேத வசனத்தில் சொல்லப்படாத எந்த உபதேசத்தையும் தேவன் எந்நிலையிலும் ஏற்றுக்கொள்ளமாட்டார் (கலா 1:6–9). இன்றே சிந்திப்பீர்! நித்திய பரலோகத்தை இழக்காதீர்!

**❋ சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் (2 கொரி 9:6)**

சரி, நீங்கள் நன்மையை விதைப்பவரானாலும் (வேத வசனம்), தீமையை விதைப்பவரானாலும் (மாம்சத்திற்கென்று) எவ்வளவு விதைக்கிறீர்களோ அவ்வளவு பலன் உறுதி! சரி நாம் தீமையை அல்ல, நன்மையையே (ஆவிக்கென்றே) விதைக்க தீர்மானித்துள்ளோம் எனில் கவனிப்போம்:

உங்கள் தாலந்துகளை, நேரத்தை, வாய்ப்புகளை மற்றும் ஆதாரங்களை அனைத்தையுமே அதிகமாக ஆவிக்கென்று, நீதிக்கென்று பயன்படுத்துங்கள் (மத் 25:14–40). வேலைக்கென்று கொடுக்கும் நேரத்தைவிட சபைக்கென்றும்; விஷேசங்களுக்கும் பொழுதுபோக்கிற்கும் செலவழிக்கும் நேரத்தைவிட சபையின் விஷேச கூட்டங்களுக்கும், வேத ஆராய்ச்சிக்கும், ஜெபத்திற்கும் விதைக்க வேண்டும். (அப் 17:11; அப் 11:26), (சங் 27:4) என சங்கீதக்காரனைப் போல நாமும் நாடுவோம்!

மேலும் உலக கிரியைகளிலும், பிரயாசங்களிலும் நாம் பெருவதைவிட, "கர்த்தருக்குள் நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1கொரி 15:58). தொற்காள் (அப் 9:36–39), பர்னபா (அப் 14:36,37), சாரிபாத் ஊர் விதவை (1 இராஜா 17), 2 காசு போட்ட ஏழை விதவை (லூக் 21:1–4) போன்ற அநேகர், வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி, ஆவிக்கென்று, வேத வசனத்தின்படி, தாராளமாக விதைத்தவர்கள். நாமும் அவ்வாரே விதைப்போம்! ஏனெனில் நாம் எதை விதைக்கிறோமோ, அதையே அறுப்போம்! ஆகையால், ஆவிக்கென்று விதைத்து நித்திய ஜீவனை அறுப்போம் வாருங்கள்!

– கிங்ஸ்லி ராஜா
(இணை ஆசிரியர்)



பிரியமான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எனது அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவர் இயேசு தம்மை பின்பற்றுகிறவர்கள் கனிநிறைந்த வாழ்வை வாழ விரும்பினபடியினால், அதன் அவசியத்தை நாம் புரிந்துக்கொள்ளும்படி சில உவமைகளை பேசினார். அவைகளில் ஒன்றுதான் திராட்சை செடி உவமை **(யோவான் 15).**

ஒரு விவசாயி, விதைகளை போட்டு விதைத்து, அது முளைத்து, வளர்ந்து பலன் கொடுக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்த்து, அதன் கனியை (பலனை) பார்த்து எப்படி சந்தோஷமடைகின்றாரோ?, அதைப்போல நாம் கனிகொடுக்கும் போது தேவனும் சந்தோஷமடைகின்றார். கனிகொடுக்க நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை பற்றி படிக்கலாம்:

### 1. தேவன் உங்கள் எஜமான் என்று அறிந்துகொள்ளுங்கள்.

**யோவான் 15:1** "நான் மெய்யான திராட்சச்செடி , என் பிதா திராட்சத் தோட்டக்காரர்."

நாம் நமக்கு சொந்தமானவர்கள் அல்ல, நாம் தேவனுக்கு சொந்தமானவர்கள்; நமது ஆவி, ஆத்துமா, சரீரம் மட்டுமின்றி, நம்மிடம் உள்ள ஒவ்வொன்றும் சில காலம் மட்டும் நாம் பயன்படுத்தும்படி நமக்கு இரவலாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை நமக்கு கொடுத்தவருக்கு நாம் மீண்டும் கொடுக்க வேண்டும் என்பதை மறந்துவிட வேண்டாம்.

### 2. தேவன் உங்களை சுத்தம்பண்ணுவார்; அவருக்கு இடமளியுங்கள்.

**யோவான் 15:2,3** "என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கனி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்."

அவர் சொன்ன உபதேசத்தினால் நாம் சுத்தமாயிருக்கிறோம். அவர் சொன்ன உபதேசத்தைக் கேட்டு, கீழ்படிந்து, ஞானஸ்நானத்திற்குள் இரட்சிப்பை பெற்றுள்ளோம். ஞானஸ்நானத்தை பெற்ற நாம் எப்படி கனிகொடுக்கப்போகிறோம்? பாருங்கள் தோட்டக்காரர் எப்படி கனிகொடுக்க அந்த தோட்டத்தை சுத்தம் பண்ணுகிறாரோ, அதைப்போல நாமும், தினமும் அவருடைய வசனத்திற்கும், அவருடைய கட்டளைக்கும் கீழ்படிந்து அதன்படி நடக்கும்போது, அவருக்கு மிகுந்த கனிகளைக் கொடுக்க முடியும். நம்முடைய ஆத்துமாவை அவருடைய வசனத்தினாலும், கற்பனைகளினாலும் சுத்தம் செய்யும்போது, நாம் பாவம் செய்யாதபடி நம் ஆத்துமா ஒவ்வொரு நாளும் சுத்திகரிக்கப்படுகிறது.

### 3.கிறிஸ்துவுகுள் நிலைத்தலின் அவசியத்தை புரிந்துக்கொள்ளுங்கள்.

**யோவான் 15:4-6** "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்."

அவரில் நிலைத்திருக்க வேண்டுமெனில் ஒவ்வொரு நாளும் வசனத்தை படித்து, ஜெபம்பண்ணி, நம்முடைய ஆத்துமாவில் அவருடைய கற்பனைகளை வைத்திருந்தால், நாம் கனி கொடுக்க முடியும். சபையில் வேத ஆராய்ச்சிக்கூட்டம், ஆராதனை, முக்கியமான கூட்டங்களில் பங்கு பெற்று வசனத்தில் பெலனடைந்து கனிகளை கொடுக்க முடியும்.

ஒவ்வொரு நாளும் இடைவிடாமல் ஆத்துமாக்களைத் தேடி, கண்டுபிடித்து, வசனத்தை அவர்களுக்குச் சொல்லவேண்டும். தேவனுக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும், ஆத்துமா என்ற கனிகளை நாம் அதிகம் கொடுக்க முடியும். பிதாவும், இயேசுவும் அதைத்தான் நம்மிடம் எதிர்ப்பார்க்கிறார்கள். அவருடைய வசனத்தைக்கேட்டு அன்பிலே நிலைத்திருங்கள். இப்படி இருந்தால் நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்க முடியும்.

### 4. உங்களுக்கு பலனும், தேவனுக்கு மகிமையும் ஏற்பட மிகுந்த கனிகொடுங்கள்.

**யோவான் 15:7,8** "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்."

கனிக்கொடுக்கின்ற வாழ்வு உங்களுக்கு பெலனையும், தேவனுக்கு மகிமையையும்

கொண்டுவரும். நாம் அவருடைய கற்பனைகளுக்கும், உபதேசத்திற்கும் கீழ்படிந்து நடக்கும் போது, நாம் எதை அவரிடத்தில் கேட்கிறோமோ அதைப் பெற்றுக்கொள்வோம்.

ஆவிக்குரிய கனியைப் பற்றி பார்க்கும் போது, அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியிருக்கிறார்; **கலா 5:22,23** "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்;" இப்படிப்பட்ட கனிகளைத் தரும்படியாகவும் இருக்கவேண்டும்.

ஒரு நாளைக்கு, ஒரு நபருக்கு, ஒரு கைப்பிரதி கொடுக்கவேண்டும். ஒரு நபரையாவது வேத ஆராய்ச்சிக் கூட்டத்திற்கோ, ஆராதனைக்கோ நாம் அழைத்து வர வேண்டும். அவருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும் கைக்கொள்ளும் போது இப்படிப்பட்ட கனிகளை நாம் கொடுக்க முடியும்.

**யோவான் 15:16** "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்."

பிரியமானவர்களே! நம்மை அவர், கனிக்கொடுக்கும்படியும், அவைகள் நிலைத்திருக்கும்படியும் ஏற்படுத்தியிருக்கிறார்.

— பேபி பிலோமோன்

பொதுவான செய்திகள்

## இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழர்கள்

பூலித்தேவன் (1715–1767)



- நெற்கட்டான் செவ்வலைத் தலைமை யிடமாகக் கொண்டு ஆண்டு வந்த பாளையக் காரராவார்.
- இந்திய விடுதலை வரலாற்றில் 'வெள்ளையனே வெளியேறு' என்று மு தன்முதலாக 1751 ஆம் ஆண்டில் வீர முழ க்கமிட்டவர்.
- இந்தியாவின் முதல் விடுத லைப்போர் எனக் கருதப்படும் சிப்பாய்க் கலகத்திற்கும் (1857) முன்னோடியாகக் கருதப்படுகி றார்.
- பூலி நாடு என்பது, பாண்டிய நாட்டில் அமை ந்த அகநாடுகளுள் ஒன்று. சங்ககாலம் தொட்டே இருந்த பாண்டியர் ஆட்சியின் கீழ் வரும் இந்நாடு.
- பூலித்தேவன், தன்பகு தியில் நிலத்தை அடமானம் பிடிக்கும் பண் ணையார்களுக்கோ அல்லது ஆதிக் கம் செலுத்தும் மேல் இடத்திற்கோ, மேல்வாரம் தன்மையிலோ, வரி என்ற பெயரி லோ, ஒரு மணி நெல்லைக் கூட யாருக்கும் கண்ணில் காட்டமாட்டாராம். இதன் காரணமாய் ஆவுடையாபுரம் நெற்கட்டுஞ் செவ்வல் எ ன்றாகியது.
- 1750-ல் இராபர்ட் கிளைவ் திருச்சிக்கு வந்து ஆங்கிலக் கொடியை ஏற்றி வைத்தான், இதனால் வெகுண்ட பூலித்தேவன் திருச்சிக்குத் தனது படையுடன் சென்று ஆங்கிலேயரை எதிர்த்தான். இதில் பூலித்தேவனே வெர் றிபெற்றான்.
- 1755 ஆம் ஆண்டு (கர்னல் அலெக்ஸாண்டர் ஹெரான்) தம் கோட்டை யை முற்றுகையிட்டு கப்பம் கட்ட நிர்ப்பந்தம் செய்த போது, தன்னுடைய நிலப்பகுதியில் வசு லிக்கும் உரிமை, வெள்ளையர் எவருக்கு ம் கிடையாது என வீர முழக்கமிட்டு, வெள்ள ளயனை விரட்டியடித்து முதல் வெற்றி பெர் றார்.
- அதே ஆண்டில் களக்காட்டிலும், நெற்கட்டும் செவல் கோட்டையிலும் நடைபெ ற்ற போரில் ஆங்கிலேயரின் கைக்கூ லியான மாபூஸ்கானை தோற்கடித்தார்.
- அதனை அடுத்து திருவில்லிபுத்தூர் கோட்டையில் நடைபெற்ற போரில் ஆற்காடு நவாபி ன் தம்பியைத் தோற்கடித்தார்.
- 1765 அக்டோபர் மாதம், வாசு தேவ நல்லூர் கோட்டையைத் தா க்கிய காப்டன் பெரிட்சன், பூலித்தேவனிடம் தோற்றான்.
- பூலித்தேவர் ஆங்கிலேயரா ல் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்ட செய்தியை மக்கள் அறிந்தால், அவர்கள் கிளர்ச்சி செய்யக்கூடும் என்பதால், ஆங்கிலேயர் இதனை ரகசியமாகச் செய்திருக்கலாம் என்று ந ம்பப்படுகின்றது.
- அவரின் நினைவாக, அவர் வாழ்ந்த இல்லம் தமிழக அரசால் புதுப்பிச் கப்பட்டு, அவரது நினைவு மாளிகையாக அமை க்கப்பட்டுள்ளது.

# நல்ல கனிகளை கொடுப்போம்

அன்பான வாலிப தம்பிகளே! தங்கைளே! உங்கள் ஒவ்வொருவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன்.

தேவன் ஒரு புதிய வருடத்தை கொடுத்திருக்கிறார். அதே வேளையில், இந்த வருடத்தில் நம்முடைய ஆவிக்குரிய வாழ்வின் முன்னேற்றத்தையும் எதிர்பார்க்கிறார். ஆகையால் நல்ல கனிகளை கொடுக்கிறவர்களாக முதிர்ச்சியை நோக்கி இருப்போம். அது மிக அவசியம் என்பதை, ஆண்டவர் உவமை மூலம் தம்மை பின்பற்றுகின்ற ஒவ்வொருவருக்கும் கற்றுக்கொடுத்தார்; இன்றும் கற்றுக்கொடுக்கிறார்.

**லூக்கா 13:6–9** "அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவன் தன் திராட்சத் தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிபோடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்."

ஒரு குழந்தை பிறந்து 2 வருடமளவும் நடக்காமல், பேசாமல் இருந்தது என்றால், அதின் சரீரத்திலே, வளர்ச்சியிலே குறைபாடு உள்ளதா என்று அறிய முற்படுவோம். பிறந்து 20 வருடமாகியும் தன் குழந்தையிடம் எந்த ஒரு வளர்ச்சியும் இல்லை என்று அறிந்த தாயும், தகப்பனும் மிகுந்த மனஉளைச்சலாகி, கண்ணீருடன் கலெக்டரிடம் கருணை கொலை செய்யும்படி மனு கொடுத்ததை நாம் நாளிதழில் வாசித்திருப்போம். ஏன்? வளர்ச்சியற்ற பிள்ளை என்பது தனக்கு தானே அப்பிரயோஜனமாயும், பெற்றோருக்கு மனநோவாவும் இருப்பதினால் தான். அதேப்போல் தான் நாமும் வளர்ச்சியற்றவர்களாய், கனிக்கொடுக்காத வாழ்க்கை வாழும் போது, நமக்கு நாமே பிரயோஜனமற்றவர்களாகவும், நம்மை படைத்த தேவனுக்கு மன சஞ்சலத்தை உண்டாக்குறவர்களாகவும் மாறிவிடுகிறோம் (ஆதி 6:5,6).

இந்த உவமையில் திராட்சை தோட்ட எஜமானனானவர், பிதாவாகிய தேவன். அவரிடம் பரிந்துப்பேசுகிற கண்காணிப்பாளராக ஆண்டவர் இயேசு இருக்கிறார். அந்த தோட்டத்தில் மரமாக நீங்களும், நானும் இருக்கின்றோம். எப்படிப்பட்டதான பராமரிப்பில், யாருக்கு சொந்தமானவர்களாக நாம் வளருகின்றோம் என்று பார்த்தீர்களா? நாம் எவ்வளவு விசேஷித்தவர்களாக இருக்கின்றோம்.

நம்முடைய எஜமானர் நம்மிடம் ஆவிக்குரிய வளர்ச்சியை, முதிர்ச்சியை, கனிதரும் வாழ்வை எதிர்பார்க்கிறார். நாம் எவ்வளவு ஜாக்கிரதையான வாழ்வு வாழ முற்பட வேண்டும். வருடா வருடம் வயதில் (சரீரத்தில்) வளர்வதைப் போல, ஆவியிலும் வளர்ச்சி பெற வேண்டும்.



இன்றைய உலகில், அநேக வாலிபர்கள் தங்களுடைய தவறான வாழ்க்கை முறையினாலும், சரியான வழிநடத்துதல் இல்லாமலும் வழிதவறி போகின்றனர். தங்களுடைய நோக்கத்தை உணராமல் கனிகொடாத மரத்தைப் போல பாவத்தில் மூழ்கி, பலனற்ற வாழ்க்கையே வாழ்கின்றனர். இது தேவன் விரும்புகின்ற வாழ்க்கை அல்ல.

ஆண்டவர் இயேசு கூறுவதைப் போல (யோவா 15:8), கிறிஸ்தவ வாலிபர்களாகிய நாம், நம்மையும் சரி செய்து, முதிர்ச்சியை நோக்கி கனிதருகின்றவர்களாக வளருவோம். நான் சரியாக இருக்கின்றேன் என்றால், என் நண்பன் நல்வழியில் வந்திட, அவர்களுக்கு இயேசுவைப் பற்றிச்சொல்லி அவர்களையும் சீர்ப்படுத்த வேண்டும்.

தேவன் ஒரு முழு வருடத்தை நம்முடைய கையில் கொடுத்திருக்கிறார். எனவே, கனிகொடுக்கிற வாழ்விற்கு திட்டமிடுவோம், முயற்சிசெய்வோம், செயல்படுவோம். நம்மை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே (பிலி 4:13) வெற்றி பெற்று, எஜமானராகிய பிதாவாகிய தேவனுடைய அன்பையும், அருளையும் பெற்றுக்கொள்வோம்.

கர்த்தர் உங்களோடிருப்பாராக!

இப்படிக்கு

ஜோசப் பிரதீப்

# உபதேசம் என்றால் என்ன ?

எதை செய்ய வேண்டும்? அதை எப்படிச் செய்ய வேண்டும்? என்று போதிப்பதும், எதை செய்யக்கூடாது? அதை ஏன் செய்யக்கூடாது என்று கற்பிப்பதுமே 'உபதேசமாகும்.'

எனவே உபதேசம் என்ற வார்த்தைக்கு "கற்றுக்கொடுத்தல்"

(உபா 17:18,19: ஏசாயா 54:13: யோவான் 6:45: மத்தேயு 11:29) அல்லது, "போதனை செய்தல்" என்பது அர்த்தமாகும். (மத்தேயு 5:2: மாற்கு 1:22;2:2,13: ரோமர் 12:7).

மோசேயின் நாட்களில் பழைய உடன்படிக்கையாகிய நியாயப்பிரமாணம் இஸ்ரவேலருக்கும், அவர்களுடைய சந்ததிக்கும் உபதேசமாக கற்றுக் கொடுக்கப்பட்டது. ( உபாகமம் 6: 7 : 17: 18 –20) அதைப்போல, இன்றைய கிறிஸ்துவ யுகத்தில், உடன்படிக்கையாகிய கிறிஸ்துவினுடைய ஆவியின் பிரமாணம், கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு உபதேசமாகவும், சட்டமாகவும் கற்பிக்கப்பட வேண்டும்.

(மத்தேயு 28 : 18–20 : மாற்கு 16 :15, 16: ரோமர் 6 : 17: 2 தீமோ 1 : 13: 3:14 ).

பரலோகத்தின் தேவனால் மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள வார்த்தையாகிய உபதேசமானது, இ வானத்திலிருந்து பூமிக்கு மழையை அனுப்பியது போலவும் (உபா 32 : 2: ஏசாயா 55:10, 11: சங்கீதம் 147:15). குறிப்பிட்ட இலக்கை நோக்கி எய்யப்பட்ட அம்பு போலவும் (1 சாமு 20:20–36) பட்டயத்தால் உருவக் குத்தியது போலவும் (லூக் 2:35: அப் 2:37: எபி 4:12): நிலத்தில் விதைக்கப்படுகின்ற விதையைப் போலவும் இருக்கிறது (லூக்கா 8:5–15).

## உபதேசமா? அல்லது உபதேசங்களா? எது சரி?

உபதேசம் என்பதற்கும், உபதேசங்கள் என்பதற்கும் என்ன வித்தியாசம்?

உபதேசம் என்பது 'ஒரே வழி,' ' இதுதான் சத்தியம்,' 'இப்படிக் கீழ்படிந்தால்தான் நித்திய ஜீவன்' என்று ஓங்கி உரைப்பது! (யோவான் 14:5: மத்தேயு 16 : 18)

கிறிஸ்துவை எப்படியும் பின்பற்ற, எதை வேண்டுமானாலும் செய்யலாம், எந்த ஆவிக்குரிய நல்ல அமைப்புகளும் சரியே என்று போதிப்பது தான் உபதேசங்கள் ஆகும் (நீதி 16:25).

எந்த விஷயத்திலும் 'மெய்' என்பது ஒன்று மட்டும்தான் இருக்க முடியும். பொய்யும், தவறுகளும் தான் ஒன்றுக்கு மேற்பட்டிருக்கும்.

பரிசுத்த வேதாகமத்தில் மெய்யைப் பற்றிக் கூறும் போது, உபதேசம் (Doctrine) என்று ஒருமையிலும்,

பொய்யைப் பற்றிக் கூறும்போது, உபதேசங்கள் (Doctrines) என்று பன்மையிலும் ஒரே மாதிரியாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கவனிக்கவும்

பொய்யைப்பற்றிக் கூறும்போது, மனுஷருடைய கற்பனையான உபதேசங்கள் (மத்தேயு 15:9: கொலோசெயர் 2:21– 23), பிசாசுகளின் உபதேசங்கள் (1 தீமோ 4:1), வேற்றுமையான உபதேசங்கள் (1 தீமோ 1:3 : 6:3), பலவிதமான அந்நிய போதனைகள் (எபி 13:9) என்று வாசிக்கிறோம்.

கவனிக்கவும்

மெய்யைப்பற்றிக் கூறும்போது, கிறிஸ்துவின் உபதேசம் (யோவான் 8:31 : 2யோவான் 9–11), ஆரோக்கியமான உபதேசம் (1 தீமோ 1:11: 2தீமோ 4:3: தீத்து 1:9 :2:1), கற்றுக் கொண்ட உபதேசம் (ரோமர் 16:17), தேவபக்திக்கேற்ற உபதேசம் (The doctrine which accords with Godliness) (1 தீமோ 6 :3),

உபதேச சட்டம் (ரோமர் 6:17) என்று வாசிக்கிறோம்.

ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம் (சபை), ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன், ஒரே சுவிசேஷம், ஒரே மந்தை ஒரே மேய்ப்பன்,

(தொடரும்...)

S. செங்கோல்ராயன் (போதகர்)
புதுச்சேரி கிறிஸ்துவின் சபை

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. M. வின்செண்ட் – கோவை
2. K. கெட்ஸி நேசக்குமாரி – மதுரை
3. S. ஜெயராஜ் – கோவை
4. K. கிருபா – தூத்துக்குடி
5. G. பிளெஸ்ஸி பிரசன்னா – வேப்பங்கனேரி
6. A. கெனித்சாம் பெஞ்சமின் – மதுரை

## பாடம் : 3 - தேவனுடைய சித்தம் மூன்று காலங்களாக மனிதனுக்கு வெளிப்படுத்தப்படுதல்

**முன்னுரை :** "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது", **(சங்கீதம் 19:1).** இப்படி தேவனுடைய மகிமையையும் அவருடைய கரங்களின் கிரியையையும் அறிந்து கொள்வதற்கு, நாம் வானங்களையும் உற்றுப் பார்க்க வேண்டும். ஆனால், ஒருவன் தன் வாழ்நாளெல்லாம் நட்சத்திரங்களை உற்றுப்பார்த்துக் கொண்டும் படித்துக் கொண்டும் இருந்தாலும், அவனால் மனிதருக்கான தேவ சித்தத்தை அறிந்து கொள்ள முடியவே முடியாது. தேவனுடைய சித்தத்தை அறிய வேண்டுமானால், நாம் அவருடைய வசனத்தைப் படிக்க வேண்டும்.

வேதாகமத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், அது மூன்று காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கவேண்டும். தகப்பன்மார்களுடைய காலம், யூதகாலம், கிறிஸ்தவ காலம். ஒவ்வொரு காலத்திலும் தேவன் தமது சித்தத்தை மனிதருக்கு வெளிப்படுத்தினார்.

ஆனாலும், ஒரு காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட தேவ சித்தம், மற்ற காலங்களிலிருந்தவர்களுக்கு பொருந்தாது. வேத வசனத்திலிருந்து அவைகளிலுள்ள அடிப்படையான வித்தியாசங்களைக் கவனிப்போம்.

### தகப்பன்மார்களின் காலம் : (ஆதியாகமம் 1:1– யாத்திராகமம் 19)

அ. ஆதாமிலிருந்து மோசே வரைக்கும் இருந்த மனிதர்களிடம், சுமார் 2,500 வருடங்களாக தேவன் தனி மனிதரோடும், தனி குடும்பங்களோடும் தொடர்பு கொண்டார்.

(I). குடும்பத்தின் தலைவன், பிதா அல்லது தகப்பன் என்று அழைக்கப்பட்டான்;, அவ அந்த குடும்பத்திற்கு ஒரு ஆசாரியனைப் போல இருந்தான்.

(II). அக்காலத்தில் தேவன் ஒரு மனுஷனுக்கு ஒரு கட்டளையும், இன்னொரு மனுஷனுக்கு மற்றொரு கட்டளையும் கொடுத்து வந்தார். ஒரு மனுஷனுக்கோ அல்லது ஒரு குடும்பத்திற்கோ அவர் கொடுத்த கட்டளைகளுக்கு அவர்களுடைய பின் சந்ததியர்கள் கீழ்ப்படியவேண்டிய அவசியமில்லை.

### எடுத்துக் காட்டுகள் :

1. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன், "நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று கட்டளையிட்டார் **(ஆதி. 2 : 17).**

(I) ஆதாமும் ஏவாளும் மரத்தின் கனியைப் புசித்தார்கள். அதனால் வந்த பலன் நமக்குத் தெரியும் **(ஆதியாகமம் 3:1–24).**

**கேள்வி :** ஆதாம் ஏவாள் தவிர மற்ற யாருக்காகிலும் இந்த மரத்தின் கனியைப் புசிக்கக் கூடாது என்று தேவன் கட்டளையிட்டாரா?

**பதில்:** ஒருவருக்குமில்லை.

2. தேவன் நோவாவுக்கு, ஒரு பேழையைக் கட்டும்படிக் கட்டளையிட்டார் **(ஆதியாகமம் 6:14–16).**

அ. இதுவரைக்கும் பூமியின் மீது மழை பெய்ததாகத் தெரியவில்லை **(ஆதி 2: 5–6).**

ஆ. ஆனால் மனிதனுடைய துன்மார்க்கத்தினால் தேவன் துக்கத்துக்குள்ளானார் **(ஆதி 6: 1–6).**

இ. பூமியிலிருந்து மனிதனை அழித்துப் போட தேவன் தீர்மானித்தார் **( ஆதி 6:7 ).**

ஈ. நோவாவுக்கு தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்தது **(ஆதி 6:8).**

உ. தேவன் நோவாவுக்கு ஒரு பேழையக் கட்டக்கொடுத்த கட்டளையின் நோக்கம், அவர், "வானத்தின் கீழே ஜீவ சுவாசமுள்ள சகல மாம்சஜந்துக்களையும் அழிக்க பூமியின் மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணத் தீர்மானித்ததே." **(ஆதி 6:8).**

ஊ. மழையோ, மழையில்லையோ நோவா தேவனை நம்பினான். "தேவன் தனக்கு கட்டளையிட்டபடி அவன் செய்து முடித்தான்." **(ஆதி 6 :22).**

எ. நோவாவின் கீழ்ப்படிதலினால் வந்த பயனை, ஆதியாகமம் ஏழாம், எட்டாம் அதிகாரங்களில் பார்க்கிறோம்.

**கேள்வி :** நோவாவுக்கு கொடுத்தது போல வேறே யாருக்காவது ஒரு பேழையைக் கட்டக்

கட்டளையிடப்பட்டதா?

பதில்: ஒருவருக்குமில்லை.

3. தேவன் ஆபிரகாமுக்கு அவன் குமாரனாகிய ஈசாக்கைத் தகன பலியாக, பலியிடு என்று கட்டளை கொடுத்தார். (ஆதி 22:1-2).

அ. இந்த கட்டளையின் நோக்கம் ஆபிரகாமின் விசுவாசத்தை சோதிப்பதே (வசனம் 1-12).

ஆ. ஆபிரகாம் விசுவாசத்தினால் தேவன் தனக்குக் கட்டளையிட்டப்படியே செய்யத் துணிந்தான். ஆபிரகாம் தனக்குப் பயப்படுகிறவன் என்று தேவன் கண்டு கொண்டு, ஈசாக்கின் மேல் அவன் கை போடாமல் தடுத்தார் (வசனம் 3-4).

இ. ஆபிரகாமின் விசுவாசத்தின் நிமித்தம், தேவன் அவனை ஆசீர்வதித்தார் (வசனம் 15-18).

கேள்வி : வேறே யாருக்காவது "உன் மகனைத் தகனபலியாகாப் பலியிடு'' என்று தேவன் கட்டளையிட்டாரா?

பதில்: ஒருவருக்குமில்லை.

குறிப்பு : மேற்கண்ட படி, இந்த தகப்பன்மார்களின் காலத்தில், அதாவது ஆதாமிலிருந்து மோசே மட்டும் இருந்த பிதாக்களின் காலத்தில், தேவன் ஒருவருக்கோ அல்லது ஒரு குடும்பத்திற்கோ கொடுத்த கட்டளை, மற்றவர்களுக்கோ அல்லது குடும்பங்களுக்கோ கொடுத்த கட்டளைகளிலிருந்து மாறுபட்டது என்பதைக் காண்கிறோம்.

## II. யூத காலம்:

அ. பிதாக்களின் காலம் முடியும் காலத்தில், ஆபிரகாமின் பேரன் யாக்கோபு, இரவில் ஒரு தேவதூதனுடன் "விடியும் மட்டும் போராடினான்." (ஆதி. 32:24-32).

1. இந்த தேவ தூதனால் யாக்கோபை ஜெயிக்க முடியவில்லை (வசனம் 25).
2. தேவதூதன் யாக்கோபுடைய தொடைச் சந்தைத் தொட்டார். அது சுளுக்கிற்று (வசனம் 25).
3. தூதன், "நான் போகட்டும், பொழுது விடிகிறது" என்றான்.
4. யாக்கோபு அதற்கு, ''நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக விடமாட்டேன்" என்றான் (வசனம் 26).
5. தூதன், "உன் பேர் என்ன?" என்று கேட்டார்.
6. அதற்கு அவன், ''யாக்கோபு'' என்று பதிலளித்தான் (வசனம் 29).
7. அப்பொழுது தேவதூதன், "உன் பெயர் இனி யாக்கோபு எனப்படாமல் இஸ்ரவேல் எனப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே'' என்றான் (வசனம் 28).
8. தேவ தூதன் யாக்கோபை ஆசீர்வதித்தார் (வசனம் 29).

ஆ. இப்படி நடப்பதற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன், தேவன் ஆபிரகாமை நோக்கி, (அப்பொழுது ஆபிரகாமுடைய பெயர் ஆபிராம்)

"நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்கு போ! நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரை பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். உன்னைச் சபிக்கிறவனை சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்றார் (ஆதியாகமம் 12: 1-3).

இ. பல நூற்றாண்டுகட்குப்பின் ஆபிரகாமின் சந்ததியார் "இஸ்ரவேல் ஜனம்" என்னும் பெயருடன் எகிப்து தேசத்தில் தேவன் சொன்னபடி ஒரு பெரிய ஜாதி யாயினார்.

1. இஸ்ரவேல் புத்திரர் மிகுதியாக பலுகி, ஏராளமாகப் பெருகிப் பலத்திருந்தார்கள்; தேசம் அவர்களால் நிறைந்தது (யாத்திராகமம் 1:7).
2. எகிப்தியர், இஸ்ரவேல் ஜனங்கள் (யூதர்) மேல் பொறாமை கொண்டு, அவர்களை அடிமைத்தனத்துக்குள்ளாக்கி ஒடுக்கினார்கள் (யாத்திராகமம் 1:8-14).
3. தேவன், மோசே என்னும் பெயர் உள்ள ஒரு தலைவனை இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஏற்படுத்தினார்.
4. எகிப்தியரோடு பலனற்ற தர்க்கம் பண்ணிய பிறகு, மோசே இஸ்ரவேல் ஜனங்களை அடிமைத் தனத்திலிருந்து விடுதலையாக்கி, சீனாய் வனாந்திரத்திற்கு கொண்டு போய்ச்சேர்த்தான். சீனாய் வனாந்திரம் செங்கடலுக்கு அப்பால் இருந்தது (யாத்திராகமம் 14).

5. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறின மூன்றாம் மாதத்தில், சீனாய் வனாந்திரத்திற்குள் வந்து சேர்ந்தார்கள் (யாத்திராகமம் 19:1).

அ. அந்த வனாந்தரத்தில் ஒரு மலையின் முன் கூடாரம் அடித்துத் தங்கினார்கள் (வசனம் 2).

ஆ. தேவன் மோசேயை, தம்முடன் பேசுவதற்காக மலையின் மேல் அழைத்தார் (வசனம் 3).

இ. "...நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக் கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்கு சொந்த சம்பந்தமாய் இருப்பீர்கள்" என்றார் (வசனம் 5).

ஈ. இஸ்ரவேல் ஜனங்களைத் தமது சொந்த ஜனமாகத் தெரிந்து கொண்ட பிறகு, தேவன் அவர்களுக்கு ஒரு விசேஷித்த நியாயப்பிரமாணத்தை சீனாய் மலையின் மீது கொடுத்தார் (யாத்திராகமம் 20).

1. இந்த நியாயப்பிரமாணம் அவர்களுடைய முன்னோருக்கு கொடுக்கப்படவில்லை (உபாகமம் 5:3).

2. பத்து கற்பனைகளுடைய இந்த நியாயப்பிரமாணம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது. அதாவது "அடிமைத்தன வீடாகிய எதிப்து'' தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டவர்களுக்கு மட்டும் யாத்திராகமம் 20:2).

3. இந்த நியாயப்பிரமாணம் இஸ்ரவேலரை மட்டும் கட்டுப்படுத்தினதாக இருந்தது (உபாகமம் 5:1–4).

4. அது புறஜாதியாருக்கென்று கொடுக்கப்பட்டதல்ல (ரோமர் 2:14).

உ. இப்படி ஆயிரத்து ஐந்நூறு வருடங்களாகத் தனிநபருடன் குடும்பங்களுடனும் தொடர்பு கொள்ளாமல், இஸ்ரவேல் ஜனங்களுடன் ஒரே ஜாதியாக (கூட்டமாக) தேவன் தொடர்பு கொண்டார்.

**குறிப்பு :** இந்த "நியாயப்பிரமாணம்" பலவிதமாய், ''உடன் படிக்கை'' என்றும், ''கர்த்தருடைய நியாயப்பிரமாணம்'' என்றும் ''மோசேயின் நியாயப்பிரமாணம்'' என்றும், பலவாராய் அழைக்கப்பட்டிருந்தது. யூதருக்கும் புறஜாதி ஜனங்களுக்கும் நடுவே தடுப்புச் சுவராய் நின்றது. இஸ்ரவேல் ஜனங்களுக்கே இந்த நியாயப்பிரமாணம் இருந்ததேயொழிய புறஜாதியாருக்கல்ல; இந்த ஒழுங்கு மோசேயிலிருந்து கிறிஸ்து மட்டும், பெந்தெகொஸ்தே நாள் மட்டும் நின்றது.

– தொடரும்...

## தினசரி வேத வாசிப்பு

| நாள் | வாசிப்பு பகுதி | டிக் செய்யவும் |
|---|---|---|
| பிப் 16 | எண். 15:22 - 16:50 | ☐ |
| பிப் 17 | எண். 17 -20 | ☐ |
| பிப் 18 | எண். 21 - 23 | ☐ |
| பிப் 19 | எண். 24:1- 26:34 | ☐ |
| பிப் 20 | எண். 26:35 - 28:31 | ☐ |
| பிப் 21 | எண். 29:1- 31:47 | ☐ |
| பிப் 22 | எண். 31:48 - 36:13 | ☐ |
| பிப் 23 | உபாகமம். 1:1- 15 | ☐ |
| பிப் 24 | உபா. 1:16 - 3:29 | ☐ |
| பிப் 25 | உபா. 4:1- 6:15 | ☐ |
| பிப் 26 | உபா. 6:16 - 9:21 | ☐ |
| பிப் 27 | உபா. 9:22 - 12:32 | ☐ |
| பிப் 28 | உபா. 13:1- 16:8 | ☐ |
| மார்ச் 1 | உபா. 16:9 - 19:21 | ☐ |
| மார்ச் 2 | உபா. 20:1- 23:14 | ☐ |
| மார்ச் 3 | உபா. 23:15 - 27:10 | ☐ |
| மார்ச் 4 | உபா. 27:11 - 28:68 | ☐ |
| மார்ச் 5 | உபா. 29:1 - 34:12 | ☐ |
| மார்ச் 6 | யோசுவா 1:1- 9 | ☐ |
| மார்ச் 7 | யோசு. 1:10 - 4:24 | ☐ |
| மார்ச் 8 | யோசு. 5:1- 8:23 | ☐ |
| மார்ச் 9 | யோசு. 8:24 - 11:9 | ☐ |
| மார்ச் 10 | யோசு. 11:10 - 14:15 | ☐ |
| மார்ச் 11 | யோசு. 15 -17 | ☐ |
| மார்ச் 12 | யோசு. 18:1- 21:12 | ☐ |
| மார்ச் 13 | யோசு. 21:13 - 24:33 | ☐ |
| மார்ச் 14 | நியாதிபதிகள். 1- 3 | ☐ |
| மார்ச் 15 | நியாயா. 4 - 6 | ☐ |

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங் 1:2)

# கடுகு விதை

வசனப்பகுதி: லூக் 13 : 18,19

கடவுளின் செல்லங்களா, உங்களை ஆண்டவர் இயேசுவின் பெயராலே வாழ்த்துகிறேன். மீண்டும் உங்களை இந்த இதழ் மூலம் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். புது வருடத்தில் தீர்மானம், எதிர்பார்ப்பு என எல்லாம் புதிதாக இருக்கும்.

இப்ப கூட கடுகு விதையிடம் இருந்து ஒரு புது காரியத்தை கற்றுக்கொள்ளலாமா? இயேசு, கடுகுவிதை பற்றி என்ன சொன்னார் தெரியுமா? தேவனுடைய ராஜ்ஜியம் கடுகு விதைக்கு ஒப்பாக இருக்கிறது என்று சொன்னார்.



நீங்கள் உங்க வீட்டில் கடுகுவிதையை பார்த்திருப்பீர்கள். உங்கள் அம்மா சமைக்கும் போது, அருமையாக குளம்பு வைத்த பிறகு, கடைசியாக ஒன்று செய்வார்கள். அது என்ன தெரியுமா? குளம்பை கடுகு போட்டு தாளிப்பாங்க. அப்பதான் அந்த குளம்பின் மனம் சூப்பராக இருக்கும். சின்ன கடுகுதான். ஆனால் அது பெரிய வேலை செய்யும்.

அந்த சிறிய கடுகை தான் தேவனுடைய ராஜ்யத்திற்கு ஒப்பிட்டு இயேசு பேசுகிறார். ஒரு மனுஷன் கடுகை எடுத்து தன்னுடைய தோட்டத்தில் போட்டான். அது வளர்ந்து பெரிய மரமானது, ஆகாயத்து பறவைகள் வந்து அதின் கிளைகளில் அடைந்தது. பிள்ளைகளா! சின்ன கடுகு இந்த மனுஷன் தன் தோட்டத்தில் போட்டதால் எவ்வளவு பயன் பாருங்கள்.

நீங்கள் கூட சின்ன பிள்ளைகளாக இருந்தாலும், சபைக்கு மிக உதவியாக இருக்கலாம். நீங்கள் செய்யும் வேலை ரொம்ப சின்னதாக இருக்கலாம்; யாருமே கவனிக்காததாக இருக்கலாம். உதாரணமாக, சபைக்கட்டிடத்தை சுத்தம் செய்வது, பாட்டு புக் எடுத்து வைப்பது, இருக்கைகளை துடைப்பது போன்றவை; மற்றும், இயேசுவைப் பற்றி உங்களுக்கு ஞாயிறு வேதபாட பள்ளியில் சொல்வதை உங்க நண்பர்களுக்கு சொல்வது. இது அநேகருக்கு ஆசீர்வாதமாக மாறும். அப்பொழுது நீங்களும் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்க முடியும். கர்த்தருடைய சபைக்காக வேலை செய்வீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்!

மனப்பாட வசனம்: எரேமியா 31: 14

ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவேன்; என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இப்படிக்கு,

உங்கள் அண்ணன் – அன்பு ஏசுதாஸ்.எஸ்

# திராட்சை தோட்டத்தின் வேலைக்காரன்

சிறுவர் பகுதி

உங்களை வாழ்த்துகிறேன். இந்த முறை ஆண்டவர் இயேசு சொன்ன ஒரு உவமையையும், அதிலிருந்து தேவன் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதையும் கற்றுக்கொள்ளப் போகிறோம்.

ஒரு மனுஷன் ஒரு திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதைப் பாதுகாக்க சுற்றிலும் வேலியடைத்து, அந்த திராட்சை பழ இரசங்களை பிழிந்தெடுக்க இரச்தொட்டியையும் உண்டுபண்ணி, அவைகளை சேமித்து வைக்க கோபுரத்தையும் கட்டி, அதற்கு தேவையான எல்லாவற்றையும் உண்டாக்கி, அதை குத்தகைக்கு சிலரிடம் விட்டுச்சென்றான். கனிகாலம் வந்த போது, தன்னுடைய பங்கை வாங்கிவரும்படி, தனது வேலைக்காரனை திராட்சை தோட்டத்திற்கு அந்த முதலாளி அனுப்பினார்.

திராட்சை தோட்ட குத்தகைக்காரர்களோ, அந்த வேலைக்காரனை அடித்து அவமானப்படுத்தினார்கள். மீண்டும் வேறே வேலைக்காரனை அனுப்பினார் அந்த முதலாளி. அவனை அவர்கள் கொலை செய்தனர். மீண்டும் மீண்டும் வேலைக்காரர்களை முதலாளி அனுப்பினார்; அவர்களோ (அந்த வேலைக்காரர்கள்) அனைவரையும் துன்பபடுத்தி, கொன்றுபோட்டனர். கடைசியாக, தன் மகனை அனுப்பினால், அவர்கள் பயந்து, தன்னுடைய பங்கை தந்துவிடுவார்கள் என்று



நினைத்து அனுப்பினார். அவர்களோ அவர் மகனை, சொத்துக்கு உரிமைக்காரன் என்று அவனை கொன்றுபோட்டார்கள். இவ்வளவு காலம் பொறுமையாக இருந்த அந்த முதலாளி என்ன செய்தார் தெரியுமா? குத்தகைக்காரர் அனைவரையும்

# பயிரும், களையும்

சிறுவர் பகுதி

வசனப்பகுதி: மத்தேயு 13:24–30, 37–43

ஹாய் செல்லக் குட்டீஸ்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு ஸ்தோத்திரம். எல்லாரும் நல்லா இருக்கீங்களா? உங்க எல்லாருக்காகவும் நாங்க ஜெபிக்கிறோம்.

இப்பொழுது நாம், இரண்டு நபர்கள் விதைத்து, வளர்ந்த, இரு விதமான விளைச்சலைப் பற்றி ஆண்டவர் இயேசு சொன்ன உவமை பற்றி படிக்கலாமா?

ஒரு எஜமான் தன்னுடைய நிலத்தில் விதைகளை விதைத்திருந்தார். அந்த நிலத்தில் அவருடைய எதிரி வந்து களையை (கெட்ட விதைகளை) விதைத்துவிட்டு



சென்றான். பயிர்கள் வளர்ந்தபோது, அதனோடே களைகளும் வளர்ந்தது. அதை கண்ட அந்த எஜமானின் வேலைக்காரர்கள் அவரிடம் வந்து, நீங்கள் நல்ல விதையை விதைத்தீர்கள்; இப்பொழுது அதில் களைகளும் விளைந்திருக்கிறது; அதை பிடுங்கிப் போடட்டுமா? என்று கேட்டார்கள்.

அந்த எஜமான், நம்முடைய எதிரி அவைகளை விதைத்துவிட்டான். இப்பொழுது அவைகளை பிடுங்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் களையோடு, பயிரையும் பிடுங்கிவிட வாய்ப்புள்ளது. ஆகையால் அறுப்பு காலமட்டும் வளரவிடுங்கள். அறுக்கிற நாளில் அவைகளை கட்டி எரித்துவிடலாம். பயிர்களை எடுத்து என் களஞ்சியத்தில் வைத்துவிடலாம் என்றார்.

என்ன குட்டீஸ் இந்த சம்பவம் புரிகிறதா? நிலம் என்பது உலகம். நல்ல விதையை விதைத்த எஜமான் ஆண்டவராகிய இயேசு. நல்ல விதை தேவனுடைய பிள்ளைகள். கெட்ட (களை) விதை பிசாசின் பிள்ளைகள். அறுப்பு என்பது உலகத்தின் முடிவு. அறுக்கிறவர்கள் தேவ தூதர்கள். களஞ்சியம் என்பது பரலோகம். எரித்தல் என்பது நரகம்.

செல்லங்களா? இந்த உலகத்தில் நல்லவர்களும், கெட்டவர்களும் இருப்பார்கள். நாம் தான் தேவனுக்கு பயந்து, நல்ல பிள்ளைகளாக இருக்க வேண்டும். பெற்றோருக்கு கீழ்படியனும், தினமும் ஒழுங்காக பள்ளி செல்லனும், கர்த்தருடைய சபை கூடுகைகளுக்கு தவறாமல் செல்ல வேண்டும். தினமும் பைபிள் படித்து, ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். மேலும் இப்படிப்பட்டவர்களோடு தான் நண்பர்களாக இருக்க வேண்டும்; கெட்ட நண்பர்களின் உறவு என்பது நம்மை அழிவிற்கு கொண்டுபோய் விட்டுவிடும். ஆகையால் உங்கள் நண்பர்களை கவனமாக தெரிந்துக்கொண்டு பழகுங்கள். கர்த்தர் உங்களுடனே கூட இருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக!

**மனப்பாட வசனம் : சங்கீதம் 1:6** "கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும்."

– ரா. ஏஞ்சலின் கமலம்

## சிறுவர்கான கேள்விகள்

1. இயேசு, கடுகுவிதையை எதற்கு ஒப்பிட்டு பேசினார்?
2. நல்ல நிலத்தில் விழுந்த விதை என்ன கொடுத்தது?
3. நம்முடைய எஜமான் யார்?
4. நாம் அனைவரும் நியாயத்தீர்ப்பு நாளில் என்ன செய்ய வேண்டும்?
5. களை என்பது யார்?
6. எப்படிப்பட்ட நண்பர்களை நாம் கொண்டிருக்க வேண்டும்?

## சென்ற மாதம் விடுபட்டவர்கள்

1. R. பியூலா – மதுரை
2. P. இந்திரா – திருமங்கலம்
3. P. சூரிய பிரியா – திருமங்கலம்


அன்பு வாசகரே! உங்கள் சந்தாவை அனுப்பி தொடர்ந்து இவ்விதழை பெற்று, ஆசீர்வாதம் பெறும்படி அன்புடன் வேண்டுகிறோம். காசோலை அனுப்ப – "KIRUBAIYULLA VAARTHAI"

DEAR READERS, PLEASE RENEW YOUR SUBSCRIPTION AND ENJOY READING THIS MAGAZINE AND BE BLESSED.

FOR BANK TRANSFER : A/C NAME : KIRUBAIYULLA VAARTHAI,

BANK NAME : SBI - PONMENI BRANCH, A/C NO. 57022317422, IFSC CODE - SBIN0070704

## பிப்ரவரி மாதக் கேள்விகள்

1. தேவன், ஏதேனிலே ஆதாமை என்ன வேலை செய்ய வைத்தார்?

2. வயலிலே வெவ்வேறு வகையான விதையை, என்ன செய்யக் கூடாது?

3. மனுஷன் எதை விதைக்கிறானோ, அதை என்ன செய்வான்?

4. மிகுந்த கனிகொடுப்பதினால், பிதா என்ன செய்யப்படுகிறார்?

5. 'எதை விதைக்கிறவன் மெய்பலனைக் பெறுவான்' என்று சாலமோன் ஞானி கூறுகிறார்?

6. 'எது மிகுதி, எது கொஞ்சம்' என்று ஆண்டவர் இயேசு சொன்னார்?

7. அநேக நாட்களுக்கு பிறகு பலனைக் காண, ஆகாரத்தை என்ன செய்ய வேண்டும்?

8. 'ஆவிக்கென்று விதைக்கிறவன்' எதை அறுப்பான்?

9. 'அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள்' எதை அறுப்பார்கள்?

10. சிறுக விதைக்கிறவன், பெருக விதைக்கிறவன் எப்படி அறுப்பார்கள்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-03-2018**

அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. வெளி 1 : 6 | 6. சங் 51 : 6 |
| 2. உபா 33 : 18 | 7. நீதி 28 : 20 |
| 3. 1பேதுரு 2 : 9 | 8. மத் 5 : 6 |
| 4. எரே 31 : 14 | 9. சங் 27 : 4 |
| 5. எபி 9 : 7 | 10. சங் 84 : 10 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. காந்தா மனோகரன் - திருச்சி
2. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு - செங்கல்பட்டு
3. Mrs. மேரி சாராள் - சமயநல்லூர்
4. Mrs. மேரி ராஜ் - மதுரை
5. Mrs. ரேச்சல் தமிழரசி - பசுமலை
6. Sis. S. லில்லி புஸ்பம் - தூத்துக்குடி
7. Mrs. ஹெலன் திலக் - மதுரை
8. G. பீற்றர் பால்ராஜ் - தூத்துக்குடி
9. Mrs. ஞான சிரோன்மணி - மதுரை
10. Mrs. சந்திரா பீட்டர் - திருச்சி
11. Dr.S. ஜெபநேசன் - திண்டுக்கல்
12. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளாரம்
13. Mrs. ஷோபியா தனராஜ் - திருச்சி
14. Mrs.ரூபவதி - திருநெல்வேலி
15. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
16. M. ரோஸி - தூத்துக்குடி
17. M. ஈஸ்வரி - கரூர்
18. அ. கேரேனா எலிசபெத் - மதுரை
19. M. லாரன்ஸ் கோபி - வேப்பங்கனேரி
20. J. மாலதி ஜெயசெல்வம் - சீர்காழி
21. Mrs. லில்லி ஆல்பிரெட் - நெல்லை
22. Mrs. ருக்மணி பிரேம்குமார் - திண்டுக்கல்
23. Mr. ஆனந்த கதிரோன் - சென்னை
24. M. புஷ்ப ராணி - நாமக்கல்
25. Mrs. டெய்ஸி தர்மராஜ் - புதுக்கோட்டை
26. Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுச்சேரி
27. Mrs. சாரசி வில்லியம் - புதுக்கோட்டை
28. Mrs. ஹெப்சிபா தாமஸ் - சென்னை
29. D.I. அன்பு சுதந்திரம் - நெல்லை
30. Mrs.S. சந்தான ஜெயக்குமார் - சென்னை
31. S. டேவிட் சாந்தகுமார் - திருநெல்வேலி
32. Mrs. ராணி சாந்தகுமார் - மதுரை
33. Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
34. R. பியூலா - வளர்நகர்
35. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
36. Mrs. குளோரி திலகவதி - ஈரோடு
37. N. லூயிஸ் ரூபி - ஆம்பூர்
38. மெர்ஸி சுதா - கோவை
39. D. நேசமணி - நாமக்கல்
40. J. ஜோசப் - தூத்துக்குடி
41. Mrs. கிறிஸ்டி ஜோசப் - தூத்துக்குடி
42. Mrs. M. திரவியம் ஆனந்தன் - வேலூர்
43. A. இருதய மேரி - திருச்சி
40. Mr. J. விஜய் - வளர்நகர்
41. Mrs. S. பாக்யராஜம் - மதுரை
42. Mrs. A. கேத்ரின் அருள்நேசம் - மதுரை
43. ஜெயசுதா தேவசகாயம் - சென்னை
44. Mrs. பிலோமினா பிரபாகரன் - காரைக்கால்
45. M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
46. G. ஏஞ்சலம்மாள் - மதுரை
47. R. சரோஜா - தென்கலம்
48. A. ரோஸ்மேரி - சென்னை
49. Mrs. ஷீலா ரிச்சர்ட் தாஸ் - சென்னை
50. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
51. J. ஜான்ஸி - ஆனைமலை
52. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
53. Mrs. மெர்ஸி ரூபஸ் - சேலம்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!

# சென்ற மாதம் நடைபெற்ற ஊழியங்களுக்காக தேவனை துதியுங்கள்!



2017 ம் ஆண்டு, இறுதி நன்றி கூட்டம் மற்றும்
2018 புத்தாண்டு கூட்டத்தில் நமது ஆசிரியர்



மூலனூரில் நடைபெற்ற நற்செய்தி கூட்டத்தில்
நமது ஆசிரியர் செய்தியளித்த போது...



J.C. ஆத்தும ஆதாய பள்ளியின் பயிற்சி
வகுப்பு, அவுரங்காபாத்



J.C. ஆத்தும ஆதாய பள்ளியின் பயிற்சி
வகுப்பு, யஸ்வந்த்பூர்



J.C. ஆத்தும ஆதாய பள்ளியின் பயிற்சி
வகுப்பு, கரூர்



J.C. ஆத்தும ஆதாய பள்ளியின் பயிற்சி
வகுப்பு, அரக்கோணம்







தூத்துக்குடியில் நடைபெற்ற பார்வையற்றோர்க்கான வேதாகம முகாமில் நமது ஆசிரியர் செய்தியளிக்கிறார்,
பார்வையற்றோர்க்கு பைபிள் பாடங்கள் பிரைல் மொழியில் கொடுக்கப்பட்டது, பங்குபெற்ற அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது.













கடந்த மாதத்தில் கர்த்தருடைய வசனத்திற்கு திருமுழுக்கில் கீழ்ப்படிந்த வாலிப சகோதரர்கள் மற்றும் வயதான சகோதரிகள்

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th February 2018
Posted at Arasaradi HPO on 10th, 11th February 2018


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்








அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!




## தபால் வழி பைபிள் பாடங்கள்






அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்


உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு
**92 4421 4421, 92 4431 4431**


If undelivered please return to :
**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To